**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial

Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 907/2022 P.W. 1/L.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. பிரவீன் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 22.04.2024.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்.**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து ஹாலோ பிளாக் கம்பெனி வைத்து வேலைச் செய்து வருகிறேன். 02.08.2022 ம் தேதி வேலை அதிகமாக இருந்ததால் நான் ஒருவன்மட்டுமே வேலையைப் பார்த்துக்கொண்டிருந்தேன். இரவு 01.00 மணி வரை நான் வேலைப் பார்த்தேன். வேலைப்பார்த்து விட்டு அதன் பின்பு எனது வீட்டிற்கு சென்றுவிட்டேன்.

2. 03.08.2022 ம் தேதி அதிகாலை 06.00 மணியளவில் நான் கொடுப்பைக்குழியில் உள்ள எனது மேனுவேல் ஸ்டாண்ட் பிளாக் கம்பெனிக்கு வந்து பார்த்தபோது என்னுடைய சிமிண்ட் குடோனின் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. என்னுடைய கம்பெனியில் இருந்த 1/2 HP Motor மற்றும் 3 பீஸ் வயர் 90 மீட்டர் ஆகியவை களவு போயிருந்தது. இது சம்மந்தமாக நான் காவல்நிலையத்தில் புகார் மனுக் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். திருட்டு சம்மந்தமாக நான் CCTV பூட்டேஜ் மற்றும் போட்டோ ஆகியவற்றை காவல்துறையினரிடம் ஒப்படைத்தேன்.

3. மேற்படி களவு போன பொருட்களை நான் நீதிமன்றத்திலிருந்து திருப்பிப் பெற்றுக்கொள்ளவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

நான் கதவில் இரும்பு பூட்டு தான்போட்டிருந்தேன். அந்த பூட்டு கிடைக்கவில்லை. கதவுக்கு சேதம் இருந்ததா என்றால் ஆம் இருந்தது.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 907/2022 P.W. 2/L.W.8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. டதி | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. கணபதி | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 22.04.2024.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்.**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கூலி வேலைச் செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை எனக்குத் தெரியும். போலீசார் முத்தாரம்மன் கோவிலில் களவு போனது சம்மந்தமாக என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான்.

2. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான்.போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசுத்தரப்பு சங்கதிகளிலிருந்து முற்றிலும் மாறுப்பட்ட சங்கதியை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருப்பதால் மேற்படி தனது தரப்பு சாட்சியை நீதியின் நலன் கருதி குறுக்குவிசாரணை செய்ய கேட்கிறார். இந்நீதிமன்றம் வழக்கின் தன்மை கருதி இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154-ன் கீழ் அனுமதிக்கிறது.**

**அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 03.08.2022 ம் தேதி 10.30 மணிக்கு போலீசார் குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார்கள் என்றும் அதன் அடிப்படையில் அத்தாட்சி தயார் செய்தார்கள் என்றும் அதில் நானும் தனபாலன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்று கூறிவிட்டு தற்போது வழக்கின் உண்மை நிலையை மறைத்து எனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மை சங்கதியை மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

**இல்லை .**

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.